padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை



## பகுதி II

32

# சதிப்புரட்சியிலிருந்து தப்பித்துக்கொண்ட சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசு

1962—ம் ஆண்டு திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்கா ஒரு இராணுவச் சதிப் புரட்சியை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

சிறீலங்கா இராணுவத் தொண்டர் படையின் கப்டன் கடற்படை கொமாண்டர், துணைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மற்றும் பல உயர் பொலிஸ் அதிகாரிகள், சிவில் நிர்வாக அதிகாரிகள், பிரபல வர்த்தகர்கள் ஆகியோர் திடீர் சதிப் புரட்சி ஒன்றின் மூலம் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்காவை கைது செய்துவிட்டு, அல்லது கொலை செய்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டனர்.

இந்தச் சதிப் புரட்சியில் சம்பந்தப்பட்டிருந்த ஒரு பொலீஸ் அதிகாரி, அது நடைபெறுவதற்கு முன்பே, தனது மனைவியிடம் அதுபற்றிச் சொல்லிவிட, பிரபல அரசியல்வாதி ஒருவரின் மகளான அவர் அதை தனது தந்தைக்குச் சொல்ல, அவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் சொல்ல - சதிமுயற்சி அம்பலத்துக்கு வந்துவிட்டது.



அதில் சம்பந்தப்பட்ட ஓரிருவர் தற்கொலை செய்து கொண்டனர். பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைகளின் பின் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனையை எதிர்நோக்கியிருந்தனர்.

ஆயினும் பெரும் புள்ளிகளாகவும், அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் விளங்கிய அவர்கள், 'மாட்சிமை தங்கிய பிரித்தானிய பிரிவுக் கவுன்சிலுக்கு' மேல்முறையீடு செய்து சட்டவல்லுநர்களின் வாதத்திறமையால் விடுதலை பெற்றனர். இந்த ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி தொடர்பான சில சந்தேகங்களின் பேரில், அப்போது மகாதேசாதிபதியாக இருந்த சேர். ஒலிவர் குணதிலகாவை பதவி விலகும்படி அரசாங்கம் நிர்ப்பந்தித்தது.

சட்டப்படி பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக இருந்த அவரை நீக்குவதற்கு, சிறீலங்கா அரசுக்கு உரிமையில்லை. அதனால் மிகவும் இரகசியமானதும், நுணுக்கமானதுமான பேச்சுவார்த்தைகள் மூலம் இதற்கு மகாராணியின் ஒப்புதல் பெறப்பட்டது.

இதனால் சிறீலங்காவில் சிறீமாவோ பண்டாரநாயக்காவுக்கு முன்பிருந்த ஒவ்வொரு பிரதமர்களினதும் திரைமறைவு அரசியல் சூத்திரதாரியென்றும், தீய மேதை என்றும் விமர்சிக்கப்பட்ட சேர். ஒலிவர் குணதிலகா பதவியை இராஜினாமா செய்ய, அவரது இடத்திற்கு சிறீமாவோ பண்டாரநாயக்காவின் மிக நெருங்கிய உறவினரான 'வில்லியம் கோபல்லவா' நியமிக்கப்பட்டார்.

தெற்கில் நிலைமை இவ்வாறு இருந்தபோது, வடக்கில் 1962-ம் ஆண்டு மே மாதம் தமிழரசுக் கட்சியினர் அரசுக்கு எதிரான ஒத்துழையாமைப் போராட்டத்தை ஆரம்பித்தனர். அந்தப் போராட்டத்துக்கு 1961 பெப்ரவரி மாதம் ஆரம்பித்த மறியல் போராட்டத்துக்கு கிடைத்ததுபோன்ற பேராதரவு கிடைக்கவில்லை. மிகக் குறைவான எண்ணிக்கையுள்ள மக்களே தமிழரசுக் கட்சியினரது இந்தப் போராட்டங்களில் பங்கெடுத்துக்கொண்டனர். 'இராணுவ அச்சுறுத்தல், அரச அடக்கு முறைகளுக்கு மத்தியிலும் சாத்வீகமான முறையில் அரச எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவது மக்கள் மத்தியில் எழுச்சியை உண்டாக்காது. அவர்களுக்குப் பயத்தையும் பாதிப்பையுமே உண்டாக்கும்' என்று கூறி தமிழரசுக் கட்சியினர் தாங்களாகவே போராட்டத்தைக் கைவிட்டனர்.

ஆனால் உண்மையில் 1961-ம் ஆண்டு பெப்ரவரியில் யாழ்குடா நாட்டிற்கு அனுப்பப்பட்ட இராணுவத்தினர் அங்கேயே நிலைகொண்டிருந்து அடிக்கடி ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தனர். தமிழரசுக் கட்சியினர் குறிப்பிட்டதுபோல் இராணுவத்தினரின் வருகையும், அவர்களது ரோந்து நடவடிக்கைகளும் குடாநாட்டு மக்களுக்கு இடையூறுகளை தந்தாலும் அவர்களை அச்சத்திற்கு உள்ளாக்கவில்லை.

மாறாக தங்களது உரிமைப் போராட்டத்தை நசுக்க வந்த சிங்கள இராணுவத்தை தமது மண்ணிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்ற உணர்வே அந்த மக்களிடம் மேலோங்கி இருந்தது.

1961 பெப்ரவரியில் 'தனிநாடு, தனியரசு, தபால்சேவை, வீரம் செறிந்த அடக்கு முறைக்கு அஞ்சாத உரிமைப்போர்' என்றெல்லாம் வீரமுழக்கம் செய்து சிறை சென்ற தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிறையில் இருந்து கொண்டே அவற்றைத் தொடர்வார்கள் என்று வடக்கில் மட்டுமல்ல, கிழக்கிலிருந்த மக்களும் எதிர்பார்த்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்தபடி தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிறையில் எந்தவித அடையாள எதிர்ப்பும் போராட்டமும் நடத்தாததால், மக்களது எழுச்சியின் வேகம் குறைந்தது. இருந்தபோதிலும் பெரும்பாலான மக்கள் நம்பிக்கையைத் தளரவிடாது, தலைவர்கள் சிறையில் இருந்து விடுதலையான பின்பு போராட்டத்தை முன்பு நடத்தியதைவிட இன்னும் உக்கிரமாக நடத்துவார்கள் என்று எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால் 1961 ஒக்டோபர் மாதம் விடுதலையான தமிழரசுக் கட்சித் தலைவர்கள் 1962 மே மாதம் வரை போராட்டம் பற்றி வாயே திறக்கவில்லை. தமிழரசு தபால்சேவை, 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டம் எல்லாம் புஸ்வாணமாகப் போய்விட்டது. தமிழரசுத் தலைவர்கள் சிறை சென்று மீண்ட தங்களது வீரதீர சாதனையை எடுத்துச்சொல்லி விளம்பரப்படுத்திய அளவுக்கு, தமிழ் மக்களின் எதிர்பார்ப்பிற்கு அவர்கள் மத்தியில் இருந்த 'எழுச்சிக்கு செயல் வடிவம் கொடுத்து' தமிழினத்தின் உரிமைப் போரை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவில்லை.

> **1961 ஒக்டோபர் மாதம் விடுதலையான தமிழரசுக் கட்சித் தலைவர்கள் 1962 மே மாதம் வரை போராட்டம் பற்றி வாயே திறக்கவில்லை. தமிழரசு தபால்சேவை, 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டம் எல்லாம் புஸ்வாணமாகப் போய்விட்டது.**

சுருக்கமாகச் சொன்னால், பாராளுமன்ற தேர்தலுக்கு நாட் குறிக்காத - வாக்கு வேட்டைக்கான தேவையில்லாத காலகட்டத்தில் அநாவசியமான போராட்டங்களை நடத்தி தங்களது நேரத்தையும், சக்தியையும், வருமானத்தையும் இழக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை.

இவர்களது வாக்கு வேட்டைத் தந்திரத்தை புரிந்து கொண்ட மக்களும், இவர்களுக்குப் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் கிடைப்பதற்காக, தங்களது மண்டைகளை உடைத்துக்கொண்டு தாங்கள் இரத்தம் சிந்தத் தயாராக இருக்கவில்லை. இதனாலேயே '1962 மே மாத ஒத்துழையாமை இயக்கம்', மக்கள் ஆதரவை இழந்து தோல்வியில் முடிந்தது.

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தென்னிலங்கையில் இருந்த எதிர்க்கட்சியினரது செயல்களோடு ஒப்பிடும்போது, ஆளும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியிலுள்ள உறுப்பினர்களைப்போல், திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவின் நலன்களை காப்பதற்கான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டனர். 1962 காலகட்டத்தில் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா உண்மையில் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருந்தார். அவர்கள் போராட்டத்தை கூர்மைப்படுத்தியிருந்தால் அவர் ஆட்சியில் இருந்திருக்க முடியாது.

1962-ல் ஏற்பட இருந்த சதிப் புரட்சி நடவடிக்கைக்குப் பின் அரசியலில் நம்பிக்கையின்மையையும் உறுதிப்பாடின்மையையும் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மறுபுறத்தில் மிகமோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு அவர் முகம் கொடுக்கவேண்டியிருந்தது.

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம், வங்கித் தொழிலாளர் வேலை நிறுத்தம், பேருந்துத் தொழிலாளர் வேலை நிறுத்தம், வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் என்று பல்வேறு வேலை நிறுத்தப் போராட்டங்கள் இக் காலப்பகுதியில் நடைபெற்றன. அரசாங்க உத்தியோகத்தர்கள், தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கையை அரசு ஏற்க முடியாத அளவுக்கு அரசின் நிதி நிலைமை இருந்ததால், இராணுவத்தை பயன்படுத்தி அவர்களது வேலை நிறுத்தப் போராட்டங்களை நசுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது. உலக வங்கியிடம் கடன்பெறுவதற்கு அவர்களின் நிபந்தனையின் பேரில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் கூட்ட வேண்டிய நெருக்கடி அரசுக்கு ஏற்பட்டது.

இதனால் தென்பகுதி முழுவதிலும் அரசு எதிர்ப்புப் போராட்டங்களை திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா எதிர்கொள்ளவேண்டி இருந்தது.

ஐக்கிய தேசியக்கட்சியினர் சிறீமாவோ பண்டாரநாயக்காவால் நாட்டைத் திறம்பட ஆட்சிசெய்ய முடியாது. சிங்கள இனம் அடிமைப்படப் போகின்றது என்கின்ற கோஷங்களை முன்வைத்து அவருக்கெதிரான தீவிர பிரச்சாரங்களை தென்பகுதியில் முன்வைத்திருந்தனர்.

தமிழ் பகுதிக்கு இராணுவத்தை அனுப்பி, உரிமைப் போர் நடத்திய தமிழ் மக்களை அடித்து உதைத்து இரத்தம் சிந்த வைத்த சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசு, 1958-ல் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம், நாடு முழுவதும் தமிழ் மக்களது இரத்தத்தை ஆறாக ஓட வைத்த சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசு மிகப் பெரிய அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டிருந்த் காலகட்டத்தில் - அரசியல் தந்திரோபாய அடிப்படையில் தமிழ் மக்களின் உரிமைப் போரை வீறுகொண்டு முன்னெடுத்துச் சென்று வெற்றிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கச் செய்விப்பதற்குப் பதில், அரசு பலவீனமாக இருந்த நேரத்தில், 'போராட்டத்தைக் கைவிட்டதன் மூலம்' தமிழினத்தை இன்னும் மூர்க்கத்தனமாக நசுக்கி அழிப்பதற்கும் ஏமாற்றுவதற்குமான கால அவகாசத்தை பெறுவதற்கு, தன்னுடைய சுய நெருக்கடிகளிலிருந்து மீண்டுகொண்டு தன்னை ஒரு பௌத்த சிங்களப் பேரினவாத அரசாக புனருத்தாரணம் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தைக் கொடுத்ததன் மூலம், 'மிகப்பெரிய வரலாற்றுத் துரோகத்தை' தமிழரசுக் கட்சியினர் தமிழ் மக்களுக்குச் செய்திருக்கிறார்கள்.

**- நக்கீரன்**

படிப்பகம்